பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.3/2023

வா.சா. –1 ( சௌந்தர்ராஜன்)

நாள். 09.09.2025

வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்கள் எனது தாத்தா கருப்பணனுக்கு எப்படி சொந்தம் என்பது எனக்கு தெரியும். அது அவர் கிரையம் வாங்கிய சொத்தாகும். அவர் கிரையம் வாங்கிய சொத்து என்ற விவரத்தை என் தாவாவிலும், பிரமாண வாக்கு மூலத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்து எனது தாத்தாவுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது தாத்தா கருப்பணனுக்கு சக்திவேல் மட்டுந்தான் ஒரே ஆண் மகன் என்றால் சரிதான். எனக்கு தற்போது 38 வயது என்று பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லியிருப்பதால் 1987 ம் ஆண்டு பிறந்துள்ளீர்களா என்றால் 1986 ல் பிறந்தேன். என் தாயார் 19.03.1987 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். தாவா சொத்து அனுபவ விவரம் எனது அப்பா சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். எனது சின்னம்மா பெருமாயி, காளியம்மாள் சொன்னதன் அடிப்படையில் தெரியும். என் தாயார் பேச்சம்மாள் இறந்த பின்பு 5 ம் பிரதிவாதியான காளியம்மாளை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் சொன்னதன் அடிப்படையில் தான் தாவா வழக்குரை தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். கருப்பணனும், சக்திவேலும் உழைத்து கிடைத்த பணத்தை கொண்டு தாவா சொத்தும், பிற சொத்துக்களும் கிரையம் வாங்கினார்கள் என்றால் தவறு. கருப்பணனின் பெண்மக்களுக்கு கருப்பணனும், சக்திவேலும் உழைத்து கிடைத்த பணத்தை கொண்டு திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் தவறு. கருப்பணனின் பெண்மக்களுக்கு ஆன திருமண செலவிற்கு கருப்பணன் கடன் வாங்கியிருந்தார் என்றால் தவறு. கடன் வாங்கவில்லை. எனது தாத்தா கடன் வாங்கியிருந்தார் என்றும் அந்த கடன் தொகைகளை சக்திவேல்தான் திருப்பி செலுத்தினார் என்று சொன்னால் தவறு. சக்திவேல்தான் கடன்களை செலுத்தினார் என எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மறுத்து பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி சக்திவேல் அவருக்கு 15 வயது இருக்கும் போதே குஜராத் சென்று தொழில் செய்து சம்பாதித்தார் என்றால் சரிதான். கருப்பணனின் பெண்மக்கள் அவர்களுக்கு திருமணம் ஆன பின்பு அவரது கணவர் வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் தாத்தா உயிருடன் இருக்கும் வரை தாத்தாவின்

வீட்டில்தான் கூட்டுக் குடும்பமாக வசித்தார்கள். 15 வது அயிட்ட சொத்தில் பிரதிவாதி சக்திவேல் லாகட வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். அந்த குடியிருப்பு வீட்டை தாவாவில் சேர்க்கவில்லை என்றால் தவறு. சேர்த்துள்ளேன். அந்த வீடு பிரதிவாதி சக்திவேல் தனது சொந்த வருமானத்தை கொண்டு மட்டும் கட்டினார் என்றால் தவறு. கூட்டு குடும்பத்தில் இருந்து மொத்த வருமானத்தில் இருந்து கட்டியது. வீடு கட்டியது சக்திவேல் என்றால் சரிதான். அந்த வீடு கட்டுவதற்கு இந்திரா குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டது என்றால் தவறு. சக்திவேல் கடன் வாங்கி அந்த கடனை செலுத்தி வந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி குடியிருப்பு வீட்டிற்கு சக்திவேல் பெயரில்தான் வீட்டு வரி இரசீது இருக்கிறது என்றால் சரிதான். மின் இணைப்பு சக்திவேல் பெயரில் இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. சக்திவேல் குடியிருப்புக்கு 1 கிமீ தள்ளிதான் 2ம் வாதி வேலன் குடியிருக்கிறார் என்றால் 1/2 கிமீ தூரம் இருக்கும். தாவா சர்வேஎண். 941/2 கிணறு பிரதிவாதி சீர்படுத்தி மோட்டார் பொருத்தியிருக்கிறார் என்றால் தவறு. கூட்டுக் குடும்ப வருமானத்தைக் கொண்டு கிணறை சீர்படுத்தி மோட்டார் பொருத்தப்பட்டது.

தாவா சொத்தில் பிரதிவாதி ஆழ்துளை கிணறு போட்டிருக்கிறார் என்றால் தவறு,. என் தாத்தாதான் போட்டிருக்கிறார். ஆழ்துளை கிணறு அதிலுள்ள மோட்டார் வகையறாக்களை தாவா சொத்து விவரத்தில் காட்டவில்லை என்றாள்ல தவறு காட்டியிருக்கிறேன். தாவா 12 வது அயிட்ட சொத்தை பிரதிவாதி அவரது மனைவியான தனலெட்சுமிக்கு கடந்த 01.02.2012 அன்று செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். தனலெட்சுமி மேற்படி சொத்தை வைத்து பேங்கில் கடனை அடகு வைத்து அந்த கடனை கட்டினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்தேன். அதில் 12 வது அயிட்ட சொத்தை பேங்கில் கடனை அடகு வைத்து அந்த கடனை கட்டினார் என்ற விவரத்தை சொல்லியிருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன். அந்த தனலெட்சுமியை இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பிரதிவாதி கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் தவறு. அப்படி சொல்லவில்லை. கூட்டுக் குடும்பமாக அனுபவிப்பதாக சொல்லியுள்ளேன்.

தாவா சொத்திலிருந்து வரும் வருவாயை அவ்வப்போது பிரதிவாதியிடமிருந்து நாங்கள் பெற்று வருகிறோம் என்று தாவாவில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி எங்களுக்கு தொகை கொடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்தெந்த தேதிகளில் எவ்வளவு தொகை கொடுத்தார் என்பதையும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து கருப்பணனுக்குதான் பாத்தியப்பட்டது என்றாலும் அதை அவர் உயிருடன் இருக்கும்போதே தனது மகனான பிரதிவாதிக்கு மட்டும் கொடுத்து விட்டார் என்றாலும்

அதை அவர் மட்டுமே தனிப்பட்ட முறையில் ஆண்டனுபவித்து வருகிறார் என்றால் தவறு. அதை நாங்கள் கூட்டாக அனுபவிக்கவில்லை என்றால் தவறு. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN
Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.09 16:05:07 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.